**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07-ம் நாள் புதன்கிழமை**

**O.S. 30/2022**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **மீனா** | **தாலுக்கா** | : | **திருவாரூர்** |
| **க/பெ** | : | **தமிழ்மணி** | **கிராமம்** | : | **விளமல்** |
| **ஜாதி** | : | **பிள்ளை** | **தொழில்** | : | **வீட்டுக்குடித்தனம்** |
| **சமயம்** | : | **இந்து** | **வயது** | : | **50** |

**முதல் விசாரணை**

நான் இந்த அசல் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(கடந்த 09.04.2018 ம் தேதியிட்டு நான் தாவா சொத்தை கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி கிரயப் பத்திரத்தின் அசல் வங்கி கடன் பெற்றுள்ள காரணத்தினால் வங்கியில் உள்ளது. **(கடந்த 01.07.2019 ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. **(கடந்த 11.05.2022 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான எனது பெயரில் உள்ள நில உரிமை விபரங்கள் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. கடந்த 12.05.2022 ம் தேதியிட்டு

கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று தாக்கல் செய்கிறேன். 23.09.2020 ம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சிட்டா அடங்கல் நகல் தாக்கல் செய்யப்படுகிறது. (**கடந்த 23.05.2022 ம் தேதியிட்டு கொரடாச்சேரி காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம் / - S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.